# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 4

## அறிவிப்புகள்
## 2023-2024


**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## அறிவிப்புகள்
## 2023-2024

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 25 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

**1. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 4 ஆதிதிராவிடர் மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான உயர்கல்வி வாய்ப்புகளைப் பெருக்கிடவும், பாதுகாப்பாக தங்கி கல்வி பயிலவும், கல்வி அணுகு வழியை உறுதி செய்யவும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 4 ஆதிதிராவிடர் மாணாக்கர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். இதன் மூலம் 500 மாணாக்கர் பயன் பெறுவர்.

**2. விடுதிகளில் ஏற்படும் சிறுபராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாணாக்கரின் எதிர்பாரா மருத்துவச் செலவினம் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் உள்ள மின்விளக்குகள், மின்விசிறி, மின்மோட்டார், கிரைண்டர், மிக்ஸி ஆகிய மின்சாதனங்களின் சிறுபழுது நீக்கம் மற்றும் குடிநீர்குழாய், குளியலறை, கழிவறைகளின் பழுது நீக்கம், சுத்தம் செய்வதற்காக பொருட்கள் வாங்குதல், வண்டி வாடகை மற்றும் மாணாக்கருக்கு ஏற்படும் எதிர்பாரா விபத்து மற்றும் நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை ஆகிய செலவினங்களை விடுதிக் காப்பாளரே மேற்கொள்ளும் வகையில் ஒரு விடுதிக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.7.50 கோடி நிதி வழங்கப்படும். இதன் மூலம் 1,01,253 மாணாக்கர் பயன் பெறுவர்.

3. சென்னை மாவட்டத்தில் உள்ள 23 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூ.3.75 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

சென்னை மாவட்டத்தில் உள்ள 19 ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகள், 3 பள்ளி விடுதிகள் மற்றும் 1 பழங்குடியினர் நல கல்லூரி விடுதி என மொத்தம் 23 விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணாக்கருக்கும் சரிவிகித ஊட்டச்சத்து, சுவை மற்றும் சுகாதாரத்துடன் கூடிய உணவினை வழங்கிடும் வகையில் ஒருங்கிணைந்த சமையலறை மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூ.3.75 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 2,714 மாணாக்கர் பயன் பெறுவர்.

**4. விடுதிகளில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவு வசதிகள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளை சீரான முறையில் பராமரித்து, மாணாக்கருக்கு கல்வி பயில நல்ல சூழலை உருவாக்கும் வகையில், பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவுடன் கூடிய விடுதி மேலாண்மை அமைப்பு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

## 5. கல்லூரி விடுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய கற்றல் கற்பித்தல் அறை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு கற்றல் சூழலை உயர்த்தவும், திறனை மேம்படுத்திக் கொள்ளவும், கணினி மற்றும் இணையதள இணைப்புடன் கூடிய நவீன கற்றல் கற்பித்தல் அறை முதற்கட்டமாக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 6. விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணாக்கருக்கு ரூ.1.00 கோடி செலவில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணாக்கரின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க ரூ.1.00 கோடி செலவில் சிறப்புப் பயிற்சியும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும். இதன் மூலம் 23,112 மாணாக்கர் பயன் பெறுவர்.

## 7. சென்னை சமூகப் பணி கல்லூரியில் (Madras School of Social Work) ரூ.2.00 கோடி மானியத்தில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் (Centre for Social Justice and Equity) நிறுவப்படும்.

இம்மையத்தில் சமூக நீதி மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனைகளை வளர்ப்பதற்கான ஆராய்ச்சிப் படிப்புகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட பாடப்பிரிவுகள் தொடங்கப்படும். மேலும், சமூக நீதி மற்றும் சமத்துவம் சார்ந்த தகவல்களை சேகரித்தல், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் ஆராய்ச்சிப் படைப்புகள் வெளியிடுதல் போன்ற பல செயல்பாடுகளுக்காக இம்மையம் நிறுவப்படும்.

## 8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்த புகார் அளிக்கவும் சட்ட ஆலோசனைகள் வழங்கவும் தொழில் நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையம் ஏற்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து புகார் அளிக்கவும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான தகவல்கள் குறித்து சட்ட ஆலோசனை பெறவும், தேவையான உட்கட்டமைப்பு, மனித ஆற்றல் மற்றும் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையம் ஏற்படுத்தப்படும்.

## 9. அரசு சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டு சட்டப்படிப்பு பயிலும் மாணாக்கருக்கு உட்பயிற்சி (Internship) உதவி.

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களது பாடத்திட்டத்திற்கேற்ப உட்பயிற்சி காலங்களுக்கான (Internship) உதவி மற்றும் உதவித்தொகை ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும்.

## 10. தமிழ்நாட்டில் உள்ள 37 வகையான பழங்குடியினரின் சமூக பொருளாதார கணக்கெடுப்பு, இனவரவியல் ஆய்வு. (Ethnography study)

அரசு நலத் திட்டங்களின் பலன்கள் பழங்குடியினருக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தவும், புதிய திட்டங்களை உருவாக்குவதற்கும் தரவுகள் இன்றியமையாததாகும். எனவே, அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அடிப்படை கணக்காய்வு மேற்கொள்ளப்படும். மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் இரவலன், காடர், முத்துவன், மகாமலசர் மற்றும் மலசர் ஆகிய பழங்குடியினரின் இடப்பெயர்வினை தவிர்க்கவும், பழமை அழியா வண்ணம் காக்கவும், இனவரவியல் (Ethnography study) மற்றும் ஒலி / ஒளி ஆவணமாக பதிவு செய்யும் பணி ரூ.3.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

## 11. பழங்குடியினர் வசிக்கும் மலைப் பகுதிகளில் இணையதள இணைப்பு வசதி (Long Range Wireless Internet Connectivity).

இணையதள இணைப்பு மற்றும் அலைபேசி தொடர்பு வசதி (Internet Connectivity and Cell Phone Connectivity) கிடைக்கப் பெறாத பழங்குடியின குடியிருப்புகளுக்கு அவர்கள் வெளி வட்டார மக்களோடு தொடர்பு கொள்வதற்கும், தொலைக் கல்வி, தொலை மருத்துவம், மற்றும் இ-சேவைகளைப் பெறுவதற்கும், பழங்குடியினர் வசிக்கும் மலைப்பகுதிகளில் இணையதள இணைப்பு வசதி (Long Range Wireless Internet Connectivity) ரூ.10.00 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

## 12. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் கண்காணிக்க திட்ட கண்காணிப்பு அலகு ஏற்படுத்தப்படும்.

திட்டங்கள் அனைத்தும் பயனாளிகளுக்கு சென்றடைவதையும், ஒதுக்கப்படும் நிதி முழுமையாக செலவிடப்படுவதை கண்காணிக்கவும், தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், மாணாக்கரின் கல்வி நலனுக்காக வழங்கப்படும் கல்வி உதவித்தொகை, வன உரிமைச் சட்டம் 2006, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு துணைத் திட்டம் போன்ற திட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணிக்க திட்ட கண்காணிப்பு அலகு (Project Monitoring Unit) ஏற்படுத்தப்படும்.

## 13. பழங்குடியினர் குடியிருப்புகளை நவீன கிராமங்களாக உருவாக்குதல்.

500-க்கும் அதிகமான பழங்குடியினர் வசிக்கக்கூடிய கிராமங்களில் 50 பழங்குடியின கிராமங்களை தேர்வு செய்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP), மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி (SBGF) மற்றும் வனத்துறை ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த திட்டங்களின் பங்களிப்புடன் நவீன கிராமங்களாக உருவாக்கப்படும்.

## 14. பழங்குடியின மக்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்.

பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்பு, மருத்துவ மூலிகை வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, இயற்கை மிளகு விளைவித்தல், கோட்டா பானை தயாரித்தல், காளான் வளர்ப்பு, மூங்கில் தளவாடங்கள் தயாரித்தல், துரித உணவகங்கள் அமைத்தல் மற்றும் நரிக்குறவர்களுக்கான பிரத்யேகமான கட்டமைப்புகள் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**15. வீடற்ற 1500 பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.45.00 கோடி செலவில் வீடுகள் கட்டித் தரப்படும்.**

பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 1000 பழங்குடியினர் குடும்பங்கள் மற்றும் தற்போது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 500 நரிக்குறவர் குடும்பங்கள் என மொத்தம் 1500 குடும்பங்களுக்கு வீடுகள் ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் தகுதியின் அடிப்படையில் கட்டித் தரப்படும்.

## 16. தூய்மைப் பணியாளர்களுக்கு தூய்மைப் பணியாளர் நல வாரியம் மானியத்தின் மூலம் வீடுகள் வழங்கப்படும்.

தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் வீடுகள் தூய்மைப் பணியாளர் நல வாரிய மானியத்துடன் ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 17. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களின் சிறந்த தமிழ் படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், இச்சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, கலாச்சாரம் இலக்கியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சிறந்த எழுத்தாளர்களின் தமிழ் படைப்புகள் உலகளவில் வசிக்கும் மக்களை சென்றடைந்திடும் வகையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும்.

## 18. மாணாக்கர் விடுதிகளில் மன்றங்கள் அமைத்தல்.

மாணாக்கர் விடுதிகளில் மாணவர்களின் சமூகத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், ஆர்வங்களைக் கண்டறிந்து அதன் வாயிலாக தன்னம்பிக்கையை வளர்க்கவும், இசை மற்றும் கவின் மன்றங்கள், வாசித்தல் மன்றங்கள், புகைப்படக்கலை மன்றங்கள், சுற்றுச்சூழல் மன்றங்கள், சதுரங்கம், விவாதம், நாடகம், இசை தகவல் தொழில் நுட்பம் போன்ற புத்துணர்வு அளிக்கும் செயல்களில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் மன்றங்கள் உருவாக்கப்படும்.

## 19. வெளிநாடுகளில் கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித் திட்டம் இரண்டு திட்டக் கூறுகளாக திருத்தி அமைக்கப்படும்.

வெளிநாடுகளில் கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பு இரண்டு கூறுகளாக மாற்றி அமைக்கப்படுகிறது. திட்டம் ஒன்றில் ரூ.8.00 இலட்சத்திற்கு குறைவாக ஆண்டு வருமான உச்சவரம்பு உள்ள மாணாக்கருக்கு படிப்பின் அடிப்படையில் ஆண்டிற்கு ரூ.36.00 இலட்சத்திற்கு மிகாமலும், திட்டம் இரண்டில் ரூ.8.00 இலட்சத்திற்கு மேல் ரூ.12.00 இலட்சத்திற்கு குறைவாக ஆண்டு வருமான உச்ச வரம்புள்ள மாணாக்கருக்கு ரூ.24.00 இலட்சத்திற்கு மிகாமலும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

## 20. பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை தமிழ்நாடு பணிபுரியும் மகளிருக்கான விடுதி நிறுவனம் மூலம் மேம்படுத்துதல்.

நகரப்பகுதிகளில் பணிபுரியும் மகளிரின் தங்குமிடத் தேவைகளை பூர்த்தி செய்யவும், பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிருக்கான விடுதி நிறுவனத்துடன் (Tamil Nadu Working Women's Hostel Corporation) இணைந்து துறையின் விடுதிகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 21. 12-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கருக்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்விற்கான பயிற்சிகள்.

12-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கர் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான JEE/NEET/CLAT/English ஆகிய நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சிகள் சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படும்.

## 22. தாட்கோ மூலம் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பயிற்சிகள்.

விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் மேம்பாடு, சுயதொழில் தொடங்குவதற்கான குறுகிய / நீண்ட காலப்பயிற்சி, தொழில் முனைவோருக்கான மேம்பாட்டுத் திட்டம், உலகளாவிய திறன் பயிற்சிகள் தாட்கோ மூலம் வழங்கப்படும்.

## 23. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்துதல்.

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளவும், தற்போது தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வரும் ரூ.2.50 இலட்சம் மானியத்தொகை ரூ.6.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 24. மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை நவீனப்படுத்துதல் மற்றும் உருவாக்குதல்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிரின் வாழ்க்கைத் தரம் மேன்மையடையும் வகையில், மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிதாக உருவாக்கப்படும். ஏற்கனவே இயங்கி வரும் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் நவீனப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 5,000 மகளிர் பயனடையும் வகையில் ரூ.1.25 கோடி மானியம் வழங்கப்படும்.

## 25. தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்.

தாட்கோ மூலம் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளையோரின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட உதவிடும் பொருட்டு தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்படும்.

**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.